# மாற்றுத் திறனாளிகளின் குரல் விரைவில் உள்ளாட்சி மன்றங்களில் ஒலிக்கும்!

## நன்றி - பாராட்டு விழாவில் முதல்வர் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சகோதர உணர்வோடு விழாவுக்கு வந்துள்ளேன்!**

மாற்றுத் திறனாளிகளான நீங்கள் தலைவர் கலைஞர் அவர்களின் உள்ளத்தில் எப்போதும் நிறைந்தவர்கள்! நாம் எல்லோரும் சகோதர சகோதரிகள் என்ற உணர்வுடன் இன்னும் சொல்ல வேண்டும் என்றால், தலைவர் கலைஞர் அவர்கள் "உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே" என்று சொல்வாரே அந்த பாச உணர்வுடன் வந்திருக்கிறேன்!

இங்கே எனக்கு முன்னால் பேசியவர்கள் என்னைப் பாராட்டி பேசியபோது, அதையெல்லாம் நான் பாராட்டாக எடுத்துக்கொள்ளவில்லை; என் மேல் நீங்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கைக்கு நான் உழைப்பதற்கு ஊக்கமாக எடுத்துக்கொள்கிறேன்! அதேபோல, கோரிக்கைளையும் வேண்டுகோளாகவும் சொல்லியிருக்கிறீர்கள். உங்களுக்கே தெரியும் - என்றும் நான் உங்களில் ஒருவன். உங்களுக்கான அனைத்தையும் நிச்சயம் படிப்படியாக நிறைவேற்றியே தீருவேன்.

தலைவர் கலைஞர் சொன்னதுபோல, 'நான்' என்பதைவிட 'நாம்' என்ற சொல்லுக்குதான் வலிமை அதிகம்! அதனால்தான், ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே இது, எனது அரசு அல்ல; நமது அரசு என்று சொன்னேன்!

**எல்லோருக்கும் எல்லாம் என்பதே திராவிட மாடல் அரசின் நோக்கம்!**

"வாருங்கள் நாம் அனைவரும் சேர்ந்து நமது கனவுகளை நிறைவேற்றிக் கொள்வோம்" என்று சொன்னேன். அதனால் தான், எல்லாருக்கும் எல்லாம் என்ற பொருள்பட திராவிட மாடல் அரசு என்று நம்முடைய அரசுக்கு பெயர் வைத்தேன். திராவிட மாடல் என்றால், சமூகநீதி சமத்துவம் சமதர்மம் சகோதரத்துவத்தை காக்கக்கூடிய அரசு!

ஏழை எளியவர்கள் ஒடுக்கப்பட்டோர் ஒதுக்கப்பட்டோர் விளிம்புநிலை மக்கள் பெண்கள் இளைஞர்கள் முதியோர் மாற்றுத் திறனாளிகள் திருநர் என்று அனைவரையும் உள்ளடக்கிய அரசு இது!

இது ஏதோ அரசியலுக்காக, தேர்தலுக்காக செய்வது இல்லை; உள்ளார்ந்த அன்புடன் செய்வது! என் பிறந்தநாள் அன்றைக்கு, இங்கே நம்முடைய நண்பர் குறிப்பிட்டுச் சொன்னார், காலையில் தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா தலைவர் கலைஞர் ஆகியோருடைய நினைவிடத்திற்கு சென்று மரியாதை செலுத்திவிட்டு, அண்ணா அறிவாலயத்திற்குச் சென்று அங்கே தோழர்கள், நண்பர்களிடத்தில் எல்லாம் வாழ்த்துகளைப் பெற்று, பொதுமக்களிடமும் வாழ்த்துகளைப் பெற்று, கடைசியாக என்னுடைய மனம் முழு நிறைவு எப்பொழுது அடையும் என்று சொன்னால், இங்கே அருகே இருக்கக்கூடிய மாற்றுத்திறன் கொண்ட பள்ளிக் குழந்தைகள் பயிலக்கூடிய சிறுமலர் பள்ளியில், அவர்களுடன் இருந்து, அவர்களுடைய புன்னகையை வாழ்த்தாக பெறும்போது தான், அந்த நாளே எனக்கு முழுமை அடையும்! இன்றைக்கு நேற்று இல்லை, 1984ல் இருந்து, தொடர்ந்து 42 ஆண்டுகளாக சிறுமலரில்தான் என்னுடைய மகிழ்ச்சி முழுமை அடைகிறது! அதனால் தான், தலைவர் கலைஞர் வழித்தடத்தில், மாற்றுத் திறனாளிகளின் உரிமைகளை நிலைநாட்ட தொடர்ந்து செயல்பட்டு வந்து கொண்டிருக்கிறோம்!

**சமூக நீதி உரிமையை சட்டமாக்கியுள்ளோம்!**

இத்துடன் முத்தாய்ப்பாகதான் உங்களுக்கான கோரிக்கையை நீங்களே ஒலிக்கவேண்டும் என்று உள்ளாட்சி அமைப்புகளில் ஒரு மாற்றுத் திறனாளி உறுப்பினர் இடம் பெறுவார் என்று மாபெரும் சமூகநீதி உரிமையை சட்டமாக்கியிருக்கிறோம்!

## சமத்துவம் உருவாகக் கூடாது என நினைக்கின்ற வகுப்புவாதிகள்தான் தி.மு.க. அரசு மீது பாய்கிறார்கள்!

இதன் மூலம், 13 ஆயிரத்து 357 மாற்றுத்திறனாளிகள் உள்ளாட்சி அமைப்புகளில் உறுப்பினர்களாக நியமனம் செய்யப்படுவார்கள். தற்போது உடனடியாக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், 650 மாற்றுத்திறனாளிகளும், ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் 2 ஆயிரத்து 984 மாற்றுத் திறனாளிகளும் நியமிக்கப்படுவார்கள்.

**உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத் திறனாளி உறுப்பினராக இடம்!**

மாவட்ட வாரியாக, ஜூலை 1 முதல் விண்ணப்பங்கள் பெறப்பட்டு பரிசீலனை செய்யப்படும். மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குழுவில், மாவட்ட அளவிலான மாற்றுத்திறனாளிகள் குழுவில் இருக்கின்ற உறுப்பினர் ஒருவர் இடம் பெற்றிருப்பார். நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்கள் மன்ற கூட்டங்களில் பங்கேற்கலாம். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினருக்கு வழங்கப்படுவது போல மதிப்பூதியம் வழங்கப்படும். உறுப்பினர்களுக்கு உள்ள கடமைகள் மற்றும் அதிகாரங்களை மேற்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதனால், உங்கள் எல்லோருக்கும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகள்! பாராட்டுக்கள்!

மாற்றுத் திறனாளி தோழர்களுடைய வாழ்வு வளம்பெற எதிர்காலம் ஏற்றம்பெற நம்முடைய திராவிட மாடல் அரசில் ஏராளமான திட்டங்களையும், முன்னெடுப்புக்களையும் செய்து கொண்டிருக்கிறோம்! அதனையெல்லாம் இப்போது சொல்லவேண்டிய அவசியமில்லை. உங்களுக்கே நன்றாக தெரியும்.

அதுமட்டுமல்ல, இங்கே பேசிய நம்முடைய அருமை நண்பர் தீபக் அவர்கள், கோரிக்கையோடு என்னை சந்திக்க வந்த போது மாற்றுத் திறனாளிகளுக்கு தி.மு.க ஆட்சிக்கு வந்து நாம் செய்து கொடுத்திருக்கக்கூடிய 60க்கும் மேற்பட்ட அரசாணைகளை புத்தகமாகவே தயாரித்து வழங்கியிருந்தார். அவர் மறந்திருக்க மாட்டார். அவரே பலமுறை என்னிடத்தில் சொல்லியிருக்கிறார். அந்த அளவுக்கு சாதனை செய்திருக்கிறோம். இனியும் செய்வோம். செய்து கொண்டே இருப்போம். நம்முடைய அரசின் சேவைகள் அனைத்தையும் நீங்கள் படிக்கவேண்டும்.

இங்கே வருகை தந்திருக்கின்ற மாற்றுத்திறனாளிகள் சங்கங்களின் பிரதிநிதிகள், மாற்றுத்திறனாளிகளின் சேவைகளுக்காக அயராது பணி செய்கின்ற நல்ல உள்ளங்கள் அரசுடன் இணைந்து செயல்பட வேண்டுகிறேன். Inclusive சமூகமாக நாம வளரவேண்டும்!

**சவால்களை வென்று சாதிக்கும் மாற்றுத் திறனாளிகள்!**

இன்றைக்கு மாற்றுத் திறனாளிகள் அனைத்துத் துறைகளிலும் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். உயர்ந்த இடங்களை அடைந்திருக்கிறார்கள், விருதுகளை வாங்கி இருக்கிறார்கள். சமூகத் தடைகளை உடைத்து முன்னுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். சவால்களை வென்று வருகிறார்கள். பிறப்பினாலோ, உடல்நலக் குறைவாலோ அல்லது விபத்தினாலோ பாதிக்கப்பட்டவர்கள் அந்த பாதிப்பிலிருந்து மீளமுடியும், மற்றவர்களைப் போல நாங்களும் வெல்ல முடியும் என்பதை மெய்ப்பித்துக் கொண்டு வருகிறீர்கள். இத்தகைய அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்கள்! வாழ்த்துகள்!

"முயற்சி திருவினை ஆக்கும், முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்" என்று சொன்னார் வள்ளுவர். முயற்சி செய்தால் எதுவும் முடியும் என்பதை உண்மையில் நிரூபித்து வருகிறவர்கள் மாற்றுத் திறனாளிகள்தான். உங்களுக்கு நான் சொல்வது, உங்களுக்கு நான் இருக்கிறேன்; இந்த அரசு இருக்கும் என்கின்ற நம்பிக்கையுடன் செயல்படுங்கள். உங்களுக்கான அனைத்து வாய்ப்புகளையும் வழங்குவது என்னுடைய கடமை!

**எல்லோரும் முன்னேறுவது சிலருக்குப் பிடிக்கவில்லை!**

இது எல்லாருக்குமான ஆட்சி, எல்லாரையும் முன்னேற்றுகின்ற ஆட்சி. அதனால்தான் சில வகுப்புவாத சக்திகளால் அவர்களுக்கு துணை போகின்ற கொத்தடிமைக் கூட்டத்தால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. எல்லோரும் முன்னேறுவது சிலருக்கு பிடிக்கவில்லை. எல்லோரும் முன்னேறக் கூடாது; எல்லார்க்கும் சமூக நீதி கிடைக்கக்கூடாது; சமத்துவம் உருவாகக் கூடாது என்று நினைக்கின்ற வகுப்புவாதிகள்தான் திமுக அரசு மீது பாய்கிறார்கள்!

அதையெல்லாம் அரசியல் களத்தில் முறியடிக்கக்கூடிய வலிமையை தருவது, நீங்களும் - மக்களும் தருகின்ற அன்புதான்! அந்த வகையில், என் மனதுக்கு இதமாக இத்தகைய விழாவை ஏற்பாடு செய்திருக்கின்ற மாற்றுத் திறனாளி சகோதார சகோதரிகள் அனைவருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றி!

வள்ளுவம் வாழ்வியல் நெறியாக மாறட்டும்! சமுதாயம் குறள் சமுதாயமாக மலரட்டும்! என்று கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



சென்னை, வள்ளுவர் கோட்டத்தில், நேற்று முன்தினம் (21.6.2025) உள்ளாட்சிப் பொறுப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு பங்கேற்புரிமை வழங்கி, சமூக நீதியை நிலைநாட்டியதற்காக மாற்றுத்திறனாளிகள் ஒருங்கிணைப்புக் குழு சார்பில் நடைபெற்ற நன்றி பாராட்டும் விழாவில் கலந்து கொள்ள வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு மாற்றுத்திறனாளிகள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

## கரூர் புதிய பேருந்து நிலைய பணிகள் ஒரு மாதத்தில் நிறைவு பெறும்!

### முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. தகவல்!

கரூர்.ஜூன்.23.

கரூர் மாவட்டம் மண்மங்கலத்தில் புதிய இணை சார் பதிவாளர் அலுவலகம் கட்டும் பணியை தொடங்கிய ஊம், நெரூர் பகுதியில் கரூர் மாநகராட்சிக்கு குடிநீர் வழங்கும் நீர் சேகரிப்பு கிணறு புதுப்பிக்கப்பட்ட பயன்பாட்டிற்கு கொண்டுவரும் நிகழ்சியில் கரூர் சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட கழக செயலாளருமான வி.செந்தில் பாலாஜி பணிகளை தொடங்கி வைத்தார். கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மீ.தங்கவேல் தலைமை வகித்தார். அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் ஆர்.இளங்கோ. கரூர் மாநகராட்சி மேயர் வெ. கவிதா முன்னிலை வகித்தனர். பின்னர் கரூர் மாநகராட்சி பகுதி திருமாநிலையூரில் புதிதாக கட்டப்பட்டு வரும் கரூர் புதிய பேருந்து நிலைய பணிகளை வி. செந்தில் பாலாஜி ஆய்வு செய்தார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க, கரூர் மாநகராட்சியில் பெருகிவரும் மக்கள் தொகையின் அடிப்படையில் குடிநீர் வழங்கும் பணியை மேம்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. கரூர் மாநகராட்சி மண்டலம் 3 வார்டு எண் 13.18 பகுதி 12,17,18 மற்றும் 19 பகுதிகளுக்கு குடிநீர் விநியோகத்தினை அதிகப்படுத்துவதற்காக நெரூர் சதாசிவம் கோவில் அருகில் காவிரி ஆற்றில் நீர் சேகரிப்பு கிணற்றில் புதிய ஊடுருவல் கிணறு அமைக்கும் பணி ரூ. 60லட்சம் மதிப்பீட்டில் பணிகள் முடிவுற்று உள்ளது. இப்பகுதிகளுக்கு ஏற்கனவே 1.8 எம் எல்டி. வழங்கப்பட்ட குடிநீரின் அளவு தற்போது 2.6 எம்எல்டி குடிநீர் வழங்கும் அளவாக உயரும். இதன் மூலம் 8நாட்களுக்கு ஒரு முறை வழங்கப்பட்டு வந்த குடிநீர் 5 நாட்களுக்கு ஒரு முறை விநியோகிக்கப்படும்.

மேலும் மண்மங்கலம் வட்டத்தில் புதிய எண் 2 இணை சார் பதிவாளர் அலுவலகம் ரூ.2.58 கோடி மதிப்பீட்டில் கட்டும் பணி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த அலுவலகம் 15 சென்ட் நிலத்தில் தரைத்தளம் முதல் தளம் என இரண்டு தளத்தில் 482.33 சதுர மீட்டர் அளவில் கட்டி இப்பணி விரைந்து முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப கரூர் மாவட்ட மக்களின் வசதிக்காக கரூர் திருமாநிலையூர் பகுதியில் ரூ 40 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் கட்டும் பணியினை தொடங்கி வைத்தார்கள். இப்பேருந்து நிலையத்தில் ஒரே நேரத்தில் 68 பேருந்துகள் நிறுத்தும் வகையிலும், 82 கடைகளும், 64 கழிப்பறைகள், உணவுக்கூடம். பார்க்கிங் வசதி. புறக்காவல் நிலையம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் மிகப் பிரமாண்டமான முறையில் பேருந்து நிலைய கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது. தற்போது 80 விழுக்காடு பணிகள் முடிவுற்றது. இன்னும் ஒரு மாத காலத்திற்குள் பணிகள் முடிக்கப்பட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பொற்கரங்களால் திறந்து வைக்கப்பட உள்ளது.

எளிதில் வந்து செல்லும் வசதி, பாதுகாப்பாகவும், பேருந்து நிலையத்தை அமைத்துக் கொடுத்த முதலமைச்சர் அவர்களுக்கு கரூர் மாவட்ட மக்களின் சார்பாகவும், கரூர் தொகுதி மக்களின் சார்பாகவும், எங்களின் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். தற்போது நடைமுறையில் உள்ள பேருந்து நிலையம் நகர பேருந்து நிலையமாக செயல்படும். தற்போது கட்டப்படும் புதிய பேருந்து நிலையத்திற்கும், பழைய பேருந்து நிலையத்திற்கும், இணைப்பு பேருந்து வசதி 24 மணி நேரமும் இயக்கப்படும்.

கரூர் சுற்றுவட்ட சாலை என்பது 2012 ஆம் ஆண்டு அரசாணை வெளியிடப்பட்டு இடையில் பலகாலம் அப்பணி தொடராமலே இருந்தது. தற்போது வருவாய்த்துறை அலுவலர்கள் கள ஆய்வு மேற்கொண்டு அதற்கான வடிவமைப்பை பெற்று வரைபடங்கள் தயார் செய்து உள்ளார்கள். இப்பணியை மேற்கொள்ள நிலம் கையகப்படுத்த 2012 ஆம் ஆண்டு திட்ட மதிப்பீடு ரூ.70.கோடியாகும். இடையில் இப்பணியை தொடராமல் விட்டுவிட்டனர். காரணமாகவும் தற்போது 2021 ஆண்டு திராவிட மாடல் ஆட்சி வந்த பிறகு இத்திட்டப் பணிகளுக்கு அனுமதி வழங்கி நிலம் கையகப்படுத்த திட்ட மதிப்புகள் ரூ

370.கோடியாக உயர்ந்துள்ளது. மேலும் சாலைகள் அமைக்க ரூ.330.00 கோடி என மொத்தம் ரூ.700.00 கோடியில் பணிகள் நடைபெற உள்ளது. முதல் கட்டமாக ஈரோடு ரோடு குட்டகடை முதல் மண்மங்கலம் தேசிய நெடுஞ்சாலை வரை வரை ரூ.72 திட்ட மதிப்புக்கு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் வழங்கி உள்ளார்கள். இரண்டாம் கட்டமாக சேலம் தேசிய நெடுஞ்சாலை முதல் நெரூர் ரோடு 16 கால் மண்டபம் வரை பணிகள் நடைபெற உள்ளது. இது ஒரு கனவு திட்டம். மாநகரில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கான ஒரு சிறந்த திட்டமாகும் இது.

நெரூர் உண்ணியூர் பாலம் ஒரு மாத காலத்திற்குள் பணிகள் முடிவு பெற உள்ளது. கடவூர் பகுதியில் சிப்காட் தொழில் பூங்கா 250 ஏக்கர் நிலம் தேர்வு செய்ய பட்டு அரசுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதேபோல் முருங்கை பார்க் அமைப்பதற்கு மதுரை நெடுஞ்சாலை அரவக்குறிச்சி அருகே 6 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அதேபோல் டைடல் பார்க் அமைப்பதற்கான 3 இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது அதன் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்கள் மூன்று இடங்களையும் நேரில் பார்த்து தேர்வு செய்யப்பட்ட பின்பு வகை மாற்றம் செய்து கொடுக்கப்படும்.

கரூர் மாநகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் திட்ட பணிகள் ரூ. 800 கோடி மதிப்பீட்டில் நடைபெற உள்ளது. அதற்கான திட்ட வடிவமைப்பு பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது.

இவ்வாறு செந்தில் பாலாஜி கூறினார்.

## முதல்வரின் 'மினி பேருந்து' திட்டம்! ... முதல் பக்கத் தொடர்ச்சி

அந்த அறிவிப்பின்படி, 25 கி.மீ. தூரத்திற்கு மினி பஸ் இயக்கப்படும் என்றும் முக்கிய அரசு அலுவலகங்கள், மருத்துவமனைகள் போன்ற இடங்களுக்குச் சென்று பொதுமக்களை இறக்கிவிட ஏதுவாக மேலும் 1 கிலோ மீட்டர் தூரம் வரை மினி பஸ்களை இயக்கிடவும் வழிவகை செய்யப்பட்டது. இதன்படி, 3,103 வழித்தடங்களில் உள்ள 90 ஆயிரம் கிராமப்புறங்களில் வசிக்கும் ஏறத்தாழ 1 கோடி மக்கள் பயன்பெறத்தக்க வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இத்திட்டத்தினை 16.6.2025 அன்று தஞ்சாவூரில் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்கள்.

இதுவரை, பேருந்துகளை தங்கள் கிராமத்தில் காணாத பொதுமக்கள் எல்லாம் கண்டு மகிழ்ந்து பரவசம் அடையும் வகையில் மினி பேருந்துகள் கிராமப்புறங்களில் பயணிக்கத் தொடங்கிவிட்டன. இந்த மினி பஸ் தங்களுடைய கிராமத்திற்கு வந்ததும் மூதாட்டி ஒருவர் தரையில் விழுந்து தலைவணங்கி பேருந்தை வரவேற்றார். வேறு சிலர் பேருந்து வந்த வழித்தடத்தில் கற்பூரம் ஏற்றி மகிழ்ந்து வரவேற்று மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

**திருத்தணியிலிருந்து தும்பிக்குளத்திற்குப் புதிதாக இயக்கப்பட்ட மினி பஸ்ஸில் பயணம் செய்த ஒரு பெண், "நான் தும்பிக்குளம் கிராமத்தில் வசித்து வருகிறேன். விவசாயக் கூலி தொழிலாளியான நான், நாள்தோறும் வேலைக்குச் செல்லும்போது பஸ் வசதி இல்லாததால், நடந்தே வேலைக்குச் சென்று அவதிப்பட்டு வந்தேன். தற்போது மினி பஸ் சேவை தொடங்கியிருப்பதால், இதில், பாதுகாப்பாக வேலைக்குச் சென்று மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். எங்கள் கிராமத்திற்கு மினி பஸ் திட்டத்தைச் செயல்படுத்திய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுள்ளார்.**

பவானி என்னும் மாணவி தெரிவிக்கையில் "திருத்தணியில் மேல்நிலைப் பள்ளியில் +2 படிக்கிறேன். நான் பள்ளி செல்வதற்கு பஸ் வசதி இல்லாததால், நாள்தோறும் பள்ளிக்குச் செல்வதற்குச் சிரமம் ஏற்பட்டது. தற்போது எங்கள் ஊருக்கு மினி பஸ் வருவதால், நான் பள்ளி செல்வதற்கு மிகவும் வசதியாக இருக்கிறது" என்று மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

கூடுவாஞ்சேரி பஸ் நிலையத்திலிருந்து நெல்லிக்குப்பம் வரை செல்லும் மினி பஸ்ஸில் பயணம் செய்த கன்னிவாக்கத்தைச் சேர்ந்த வரதராஜன், "எங்கள் ஊருக்கு போக்குவரத்து வசதி கிடையாது. நாங்கள் இரு சக்கர வாகனங்களிலோ, ஆட்டோ பிடித்தோ அதிக செலவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தில் இதுவரை இருந்தோம். தற்போது எங்கள் கிராமத்திற்கு மினி பஸ் வருவதால், எங்கள் சிரமம் குறைந்து, செலவினம் குறைந்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். இத்திட்டத்தை நடைமுறைபடுத்தியுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எங்களுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்" என்று குறிப்பிட்டார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்துள்ள இந்த மினி பஸ் திட்டத்தால், இவர்களைப் போல ஏறத்தாழ 1 கோடி மக்கள் மினி பஸ்ஸில் பயணம் செய்து அளவில்லாத மகிழ்ச்சி அடைகிறார்கள். இத்திட்டம் பொது மக்களிடையே பெருத்த வரவேற்பைப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.